[15th March 1966

இராணுவ சேவைக்கு டாக்டர்கள்

*291 கேள்வி—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராணுவ சேவைக்கு பணிபுரிய டாக்டர்கள், நர்சுகளை அனுப்புமாறு மாநில அரசாங்கத்தை மத்திய அரசாங்கம் கேட்டிருந்ததா ?

(இ) ஆமெனில், அதன் விவரமும், எடுத்த நடவடிக்கையும் என்ன ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) & (b) 84 doctors and 115 nurses have been selected as on 31st January 1966 for the Armed Forces after the conflict with Pakistan arose.

மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி

*292 கேள்வி—திரு. து. ப. அழகமுத்து : கனம் செய்தி, விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 7—1—1966-ல் திருச்சி மத்திய சிறையை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டாரா ?

(இ) அப்போது கைதிகள் குறை கேட்கப்பட்டதா ? ஆமெனில் அதன் விவரம் என்ன ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம்.

(இ) இல்லை. கேள்விக்கு இடமில்லை.

'பஸ்' நிலையம், திண்டிவனம்

*293 கேள்வி—திரு. ஆ. தங்கவேலு : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திண்டிவனம் நகரிலுள்ள பஸ் ஸ்டாண்டை வேறு இடத்திற்கு மாற்றக்கூடாது என்று திண்டிவனம் நகராட்சி சமீபத்தில் ஏதேனும் தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பியதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அம்மாதிரியான தீர்மானம் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை.

திரு. ஆ. தங்கவேலு : சமீபத்தில் திண்டிவனம் நகராட்சி பஸ் ஸ்டாண்டை மாற்றுவது கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நகர மன்றத்தால் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால், அமைச்சர் அவர்கள் இங்கே அம்மாதிரி ஒன்றும் தீர்மானம் வரவில்லை என்று கூறுகிறார்களே ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஏகமனதாக தீர்மானம் செய்து மாற்றலாம் என்றால், சர்க்கார் அதை ஜாக்கிரதையாக பரிலசீனை செய்து அங்கீகரிக்கும்.